<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

அ.வ.எண். 332/2015 வா.சா.1 சேகர்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 29.07.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1,4 பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) வழக்குச் சொத்து கோவில் என்றால் சரிதான். காமாட்சி அம்மன் கோவிலும் மெய்யம்மன் கோவிலும் ஒரே வளாகத்தில் உள்ள கோயில்கள் என்றால் சரிதான். வழக்குச் சொத்து நத்தம் புல எண். 179/17 என்றால் சரிதான். மேற்படி புல எண்ணுக்கான பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதும் இல்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்து எனக்குத்தான் பாத்தியம் என்று பட்டாவோ ஆவணமோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதும் இல்லை என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு கோவில் எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் செய்துள்ளேன் என்றால் இந்து அறநிலையத்துறை வழங்கிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) நான் வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கு கோவில் எனக்கு பாத்தியப்பட்டது என்று கட்சி செய்துவிட்டு பின்னர் நிர்வாகம் மட்டும் கோரி திருத்தம் செய்தது என் கட்சிக்கு முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் 22.09.1945 தேதியிட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் சி ஷெட்யூல் சொத்து க.ச.எண்.158 விநாயகர் கோவிலுக்கும் காமாட்சி அம்மன் கோவிலுக்கும் தர்மத்துக்காக விடப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் அச்சொத்திலிருந்து வரும் வருமானத்தை மேற்படி கோவில்களுக்கு சுப்பைய தேவர் கொடுக்க வேண்டும் என்பதே ஆகும் என்றால் சரிதான். மேற்படி சொத்தை

சுப்பைய தேவரும் அவரது வம்சாவழியினரும் எவ்வித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் அனுபவித்து வந்து அதனை கோவில் செலவுகளுக்காக உபயோகித்து வரவேண்டும் என வா.சா.ஆ.1 ல் கண்டுள்ளது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ.2 04.03.1959 அன்று மேற்படி சுப்பைய தேவரும் அவரின் மக்களான கன்னிமுத்து தேவர், சண்முக தேவர், காமாட்சி தேவர் ஆகியோரும் ஏற்படுத்திக் கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணப்படி கோவிலுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் சுப்பைய தேவருக்கு ஆயுள் பாத்தியதை கொடுத்து அவருக்குப் பின்னிட்டு அவர்களது மக்கள் அனுபவித்துக் கொள்ள வேண்டும் என கண்டுள்ளது என்றால் சரிதான்.

(1, 4 பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி